www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam
(UK Branch) (பிரித்தானியக் கிளை)

000357

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள்
தமிழீழ மக்களுக்கு விடுத்த அறிக்கை.
*************************************************

அன்புக்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே;

இந்தியப் பிரதமமந்திரி திரு.ராஜீவ்காந்தியின் விசேட அழைப்பினபேரிலேயே நான் தமிழீழ
-த்தைவிட்டு உத்தியோகபூர்வமாகவே இந்தியா செல்கின்றேன். 1972ஆம் ஆண்டிலிருந்து
நாம் தமிழீழம் எனும் உயரிய இலட்சியம் குறித்து அயராது போராடி வருகின்றோம்.
இவ்வுயர்ந்த இலட்சியப்போராட்டததை அளப்பெரும் தியாகங்களுடனும் முன்னெடுத்து வரும
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மக்கள் காட்டிவரும் ஆதரவும்,பங்களிப்பும் மகத்தானது,
சொல்லொணாத் தியாகங்களும் நீங்கள் ஆற்றி வரும் பங்களிப்புமே இன்று இப்போராட்டத்தை
உன்னத நிலைக்கு கொண்டு வந்துள்ளது. இன்று நான் தமிழீழ மக்களின் பிரதிநிதியாக இந்திய
மத்திய அரசால் வரவேற்கப்படுவதற்கு நீங்கள் எமது இயக்கத்திறகு காட்டிய முழு ஆதர
வும்,பங்களிப்புமே முதன்மையான காரணமாகும். தமிழ் மககள் என்மீதும்,எம்விடுதலை
இயக்கம் மீதும் கொணடுள்ள நம்பிக்கையையும்,விசுவாசத்தையும் நான் என்றும் மறந்து
விடப்போவதில்லை. இன்று நாம் தமிழீழ வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டத்தில்
இருக்கின்றோம். இன்று இடம் பெறும் இவ்வழைப்பு வரலாற்றில் மிகமிக முக்கியமானது.
இதேநேரம் எமது போராட்டத்தில் இடம் பெற்று வரும் பேச்சுவார்த்தைகளை நீங்களும்
பார்த்திருப்பீர்கள். அது எமக்கு நன்கு தெரியும். அனைத்தையும் உணர்ந்து ராஜதந்தி
ர ரீதியிலேயே இன்று செயல்பட்டு வருகின்றோம். ஆனால் இன்று நான் உங்களை உண்மை
யாக உங்களிடமிருந்து தமிழ் மக்களின் மனங்களைச் சுமந்து கொண்டு விடைபெறுகின்றேன்.
சிங்கள அரசுகளை நம்பி பழைய வரலாறுகளால் தமிழ் மக்கள் 30வருடமாக ஏமாந்து
இருப்பது உலகறிந்த விடயம். இன்று தமிழ் மக்கள் தம் இலட்சியத்தை வென்றெடுக்கும்
ஒர்தலைமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றேன். நீங்கள் எனக்
களித்து வரும் கடமையை நான் நேர்மையாகவும்,உண்மையாகவும் உறுதியுடனும் செயவே
னென நம்புகின்றேன். தற்காலத்தில் காணப்படும் இடைக்காலத்தீர்வுகள் எமது பிரச்ச
னைகளின் தீர்வாக அமையாது.எனவே தமிழீழ மக்களின் நிரந்தரமான நிம்மதியான,சுபீ
-ட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வுக்காகவே நான் பாடுபடுகின்
றேன். இத்தீர்வு தமிழீழம் என்றே நான் நம்புகின்றேன்.

நன்றி

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே.பிரபாகரன்,தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.
23.7.1987.

தமிழீழ விடுதலைப் புலிகள்
LTTE (UK BRANCH)
54 TAVISTOCK PLACE
LONDON WC1 9RG
01 837 7162

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

(UK Branch) (பிரித்தானியக் கிளை)

000356

24.7.1987

தமிழீழச் செய்திகள்.

## இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அழைப்பையேற்று தலைவர் திரு.வே.பிரபாகரன் இந்தியா வந்துள்ளார்

இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியின் அழைப்பையேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு.வே.பிரபாகரன் இன்று நண்பகல் 12.30மணியளவில் இந்திய ஆகாயப்படையைச் சேர்ந்த கெலிகெப்ரர் விமானம் மூலம் இந்தியாவநது சேர்ந்தார்.. இந்தியப்பிரதமரின் அழைப்பையேற்று இந்தியா வரவிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரான திரு.பிரபாகரன் இந்திய ஆகாயப்படையைச் சேர்ந்த இரு விமானங்களும் மூன்று கெலிகொப்ரர் விமானங்களும் இன்று முற்பகல் 11மணியளவில் யாழ் குடாநாட்டில் சுதுமலை அம்மன் கோவிலடி எனுமிடத்திற்கு சென்று அழைத்து வந்தன. நண்பகல் 12.30மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின தலைவர் திரு.பிரபாகரன் திருச்சி விமான நிலையத்தை வந்தடைந்தார். பின்பு அங்கிருந்து சென்னை வந்த திரு.பிரபாகரன் தமிழக முதலமைச்சர் திரு.எம்.ஜி.ராமச்சந்திரனைச் சந்தித்து உரையாடினார். இதனைத் தொடர்ந்து சென்னை விமானநிலையத்திலிருந்து திரு.பிரபாகரன்,அரசியல் ஆலோசகர் திரு.பாலசிங்கம்,யாழ் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திலீபன்,யோகி,சொரணம் ஆகியோர் டெல்லி பயணமாகினர். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியின் அழைப்பையேற்று இந்தியா வருகையில் தமிழீழ மக்களுக்கு விடுத்த அறிக்கை பின்வருமாறு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்